# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

# அசல் வழக்கு எண். 53/2019

DW1 – திரு.சுப்பிரமணியன் நாள். 15.11.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் தனியாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் வாதியின் சகோதரி முத்துவிற்கு சீர்வரிசைகள் மற்றும் 7 பவுன் நகை போன்றவற்றை கொடுத்துள்ளோம் என சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. 1 ம் வாதி பாப்பாத்திக்கு திருமணத்தின்போது எனது சுயசம்பாத்தியத்தில் 5 பவுன் நகை, 2 பவுன் செல்லத்துரைக்கும், மற்றும் சீர்வரிசைகள் கொடுத்துள்ளேன் என சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல.

2. வாதிகளின் தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டார்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதியும், நானும் கூட்டனுபவம் செய்து கொண்டிருக்கிறோம் என்றும் வழக்கிற்காக எந்த ஆவணங்களும் இல்லாமல் நான் மட்டும் அனுபவம் செய்வதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாளது தேதிவரை தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து

வருவதாலும் மேலும் தகப்பனார் வேலு பெயரில் இருந்து வருவதால் வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை கேட்க உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை